

புதுச்சேரியில் மாநில தி.மு.க. அலுவலகத்தில் முரசொலி மாறன் படத்திற்கு மாநில அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## புதுச்சேரியில் முரசொலிமாறன் 91-வது பிறந்த நாள்!

## திருவுருவப் படத்திற்கு இரா. சிவா மரியாதை!

புதுச்சேரி, ஆக. 19-

முத்தமிழறிஞர் கலைஞரின் மனசாட்சியாக விளங்கியவரும் ஒன்றிய அமைச்சராக இருந்து பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி அனைவருடைய பாராட்டுதலை பெற்றவரும். மிகச் சிறந்த பொருளாதார மேதையுமாகிய மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 91-வது பிறந்த நாளை முன்னிட்டு, புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமை அலுவலகத்தில் பிறந்த நாள் நிகழ்ச்சி ஏற்று காலை 10 மணிக்கு நடந்தது.

இந்த நிகழ்ச்சியில், மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் தலைமை தாங்கி. அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில். மாநில துணை அமைப்பாளர் அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., மூர்த்தி, ஆறுமுகம், அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், கார்த்திகேயன், ராமசாமி, செல்வநாதன், தங்கவேலு, வேலவன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கிய முரசொலி மாறனின் 91 வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் அவரது படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாநகராட்சி சுகாதாரக்குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன், ஒன்றிய கழக செயலாளர்கள் தி.செழியன், கே.கே.சிவானந்தன், சி.கருணைபிரகாஷ், பகுதி கழக செயலாளர் கோவிந்தராஜ், காங்கேயம் நகர துணை செயலாளர் சுப்பு உள்பட மாவட்ட, ஒன்றிய, வட்டக் கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாநகராட்சி, 15வேலம்பாளையத்தில்

# ரூ.47.56 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவமனை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆய்வு!

திருப்பூர், ஆக.19-

திருப்பூர் மாநகராட்சி, 15 வேலம்பாளையத்தில் ரூ.47.56 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவமனையை 11.08.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன் குமார் ஜி.கிரியப்பனவர் ஆகியோர் முன்னிலையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது : திருப்பூர் மாநகராட்சி, 15வேலம்பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வருகிற மருத்துவமனையின் கட்டிடப்பணிகளை இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த மருத்துவமனையானது ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதி உதவியுடன் ரூ.47.56 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறுது. இந்த மருத்துவமனை 86 படுகை வசதிகளுடன் மூன்று தளங்களைக் கொண்டு பல்வேறு நவீன வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறுது. தரை தளத்தில் எக்ஸ்ரே, வெளிப்புற நோயாளிகள் பிரவு, சி.எஸ்.எஸ்.டி ஆய்வகம், முதல் தளத்தில் அறுவை சிகிச்சை அரங்கு, என்.ஐ.சி.யூ, மகப்பேறு பிரிவுகளும், இரண்டாம் தளத்தில் பிரசவ முன் மற்றும் பின் கவனிப்பு பிரிவு, கூட்ட அரங்கு, அலுவலகம், மூன்றாம் தளத்தில் டயாலிசிஸ் பயிற்சியாளர் அறை உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகிறுது. மேலும், எக்ஸ்ரே மற்றும் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் வசதிகளும், மகப்பபேறு பிரிவு மற்றும் பச்சிளங்குழந்தை களுக்கான பிரிவு ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறுது. இந்த மருத்துவமனையின் கட்டுமான பணிகள் 80 சதவீதம் முழுமையாக நிறைவு பெறும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. இந்த மருத்துவமனைக்காக 44 பேர் கொண்ட ஊழியர்கள் மிக விரைவில் பணி அமர்த்தப்பட இருக்கிறார்கள். அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர் மாநகராட்சி மேயர் ஆகியோர் 86 படுக்கைகளுடன் உள்ள மருத்துவமனையை 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை வைத்துள்ளார்கள். திருப்பூர் மாவட்டம், பல்வேறு வெளி மாநிலம், வெளி மாவட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்த மருத்துவமனைக்கு கட்டமைப்பை உயர்த்த வேண்டுமென்பது அவசியமாக உள்ளது. மிக விரைவில் 100 படுக்கைகள் வசதிகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும். ஒன்றை மாத கால இடைவெளியில் அரசு மருத்துவமனை முழுப்பணிகளும் முடிக்கப்பட்டு இந்த பிரம்மாண்டமான மருத்துவமனை தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்படவுள்ளது. திருப்பூர் மாவட்டத்தை பொறுத்த வரை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் ஏராளமான துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடங்களும், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், ஏற்கனவே ரூ.6.10 கோடி மதிப்பீட்டில் 23 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் கட்டிமுடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. ரூ.5.24 கோடி மதிப்பீட்டில் 9 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மேலும், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ.9.10 கோடி மதிப்பீட்டில் பி.சி.ஆர். லேப் மற்றும் கூடுதல் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதே போல், திருப்பூர் மாநகரில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கட்டிட பணிகளும் நிறைவுற்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டு பெரிய அளவிலான பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் பெருமக்கள் திருப்பூர் மாவட்டத்தில் மருத்துவ கட்டமைப்பை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் திருப்பூர் மாவட்டத்தில் புதிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ஒன்றும், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு இணையான மருத்துவமனை ஒன்று வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், தாராபுரத்தில் ரூ.24.00 கோடி மதிப்பீட்டில் அங்கு இருக்கும் வட்டார மருத்துவமனையை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு இனையாக தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கானபணிகள் நடைபெற்று வருகிறுது. அதே போல் காங்கேயத்தில் ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தும் பணி நடைபெற்று வருகிறுது. மேலும், அவிநாசியில் ரூ.5.15 கோடி மதிப்பீட்டில் குழந்தைகள் நலப்பிரிவு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. உடுமலைப்பேட்டை ஜல்லிப்பட்டி அரசு மருத்துவமனையில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறுது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களை காட்டிலும், திருப்பூர் மாவட்த்தில் தான் 24 ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான கூடுதல் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறுது. குறிப்பாக, வெள்ளகோவில், குன்னத்தூர், செம்மிபாளையம், திருமுருகன் பூண்டி , அண்ணா நகர், நெசவாளர் காலனி, நெருப்பெரிச்சல், டி.எஸ்.கே காலனி, குடிமங்கலம், பல்லடம், பி.ஆர்.எம் ஹோம், வீரபாண்டி, வேலம்பாளையம், நல்லூர், கே.வி.ஆர் நகர், கனியூர், சாவடிப்பாளையம், மேட்டுப்பாளையம், பொங்கலூர் உள்ளிட்ட 24 இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. துணை சுகாதார நிலையங்களை பொறுத்த வரை கோவில் வழி, நாரணாபுரம், இளவந்தி, துலுக்கமுத்தூர், பெரியபட்டி, ஆதியூர், குள்ளம் பாளையம் காமராஜ் காலனி, அங்கேரிபாளையம் கிழக்கு, ரோஜா நகர், பாபுஜி நகர், கோ கோம்பை தோட்டம், சாமிநாதபுரம், சந்திராபுரம், டி.எம்.எஸ் நகர், வி.ஆர்.பி நகர், சபாபதிபுரம், மூகாம்பிகை நகர், மடத்துப்பாளையம், காளிபாளையம் ஆகிய இடங்களில் துணை சுகாதார நிலையங்கள் கட்டப்பட்டு வருகிறுது. திருப்பூர் மாவட்டத்திற்கு மட்டும் 44 புதிய மருத்துவத்துறை சம்மந்தமான கட்டிடப்பணிகள் ரூ.112.21 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறுது.

திருப்பூர் மாவட்டத்தை பொறுத்தவரை நம்முடைய அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கயினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்று 39 நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் அமையும் என அறிவித்தார்கள். நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் பொருத்தவரை ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு உதவியாளர், என்று நான்கு பணியிடங்களோடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கபட்டு திருப்பூர் மாநகராட்சிக்கு 34, தாராபுரம் நகராட்சிக்கு ஒன்றும், உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு ஒன்றும், பல்லடம் நகராட்சிக்கு ஒன்றும், அவிநாசி பேரூராட்சிக்கு ஒன்றும், திருமுருகன் பூண்டி நகராட்சிக்கு ஒன்றும், என அறிவிக்கப்பட்டு அதில் பணிகள் முடிவுற்று கடந்த ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி வாயிலாக 27 இடங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 12 இடங்களில் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகிறுது. பணிகள் விரைவாக முடிக்கபட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விரைவில் திறந்து வைக்கப்படுகிறது. படியூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறுது. தாராபுரம் கொளத்துப்பாளையம் பேரூராட்சியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது விரைவில் இப்பணிகளும் முடிக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன், மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், பகுதி கழக செயலாளர் கொ.ராமதாஸ், மண்டலத்தலைவர் உமா மகேஸ்வரி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர்

மரு. முருகேசன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) (பொ) மரு.இராமசாமி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.முரளி சங்கர், மாநகர நல அலுவலர் மரு. கௌரி சங்கர் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், மருத்துவர்கள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள்,

கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கிய முரசொலி மாறனின் 91 வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் அவரது படத்திற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில், மாநகர கழக செயலாளர்கள் டி.கே.டி நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட அவைத்தலைவர் க.நடராஜன், துணை செயலாளர்கள் பொங்கலூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் வழக்கறிஞர் எஸ்.குமார், டிஜிட்டல் எஸ்.சேகர், மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, பகுதி கழக செயலாளர்கள் மேங்கோ அ.பழனிச்சாமி, கொ.ராமதாஸ், போலார் இரா. சம்பத்குமார், மின்னல் அ.நாகராஜ், வெ.ஜோதி, மண்டலத் தலைவர் தம்பி ஆர்.கோவிந்தராஜ், கழக மகளிர் அணி பிரசாரக்குழு செயலாளர் செ.உமாமகேஸ்வரி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் இரா.மணி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ப.கலைச்செல்வி, தொண்டர் அணி அமைப்பாளர் ஆனந்தி, மாமன்ற உறுப்பினர் வே.ராதாகிருஷ்ணன், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் மு.சிவபாலன், மாநகர சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கேபிள் விஜய் உள்பட வட்டக் கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் கட்டப்படும் வீடுகள் முழுவதும்

# தமிழக அரசின் நிதியில்தான் கட்டப்பட்டு வருகிறது!

## ஒலக்கூரில் நடைபெற்ற அரசு விழாவில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம்!

திண்டிவனம், ஆக. 19-

விழுப்புரம் மாவட்டம் ஊரக வளர்ச்சி துறை சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஒலக்கூர் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி ஒலக்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன் தலைமை தாங்கினார்.வட்டார வளர்ச்சி அலுவலர் சிலம்பு செல்வன் அனைவரையும் வரவேற்றார்.

ஒலக்கூர் ஒன்றிய பெருந் தலைவர் சொக்கலிங்கம், துணை சேர்மன் ராஜாராமன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 6கோடியே 93 லட்சத்தி 64 ஆயிரத்து 400 ரூபாய் மதிப்பீட்டில் 196 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான உத்தரவு ஆணைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் :

முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சியில் தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை இந்தியாவிலேயே முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

ஒன்றிய அரசின் நிதி உதவி இல்லாமல் முதன் முதலில் கலைஞர் தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகளை கட்டிக் கொடுத்த பெருமை கலைஞருக்கு அன்றும் இன்றும் இருக்கிறது.

அவர் வழியில் இன்று திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் இன்றைக்கு கலைஞர் கனவு இல்லம் வீடுகள் கட்டும் திட்டத்தில் தமிழக முழுதும் 1 லட்சம் வீடுகள் கட்டுவதற்கும் விழுப்புரம் மாவட்டத்தில் 4700 வீடுகள் கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் ஒரு வீட்டிற்கு 3 லட்சத்து 50 ஆயிரம் முழுவதும் தமிழக அரசின் நிதியில் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஒன்றிய அரசு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு கொடுக்கும் நிதியை காட்டிலும் 2 மடங்கு கூடுதலாக தொகை கொடுத்து கிராமத்தில் தொகுப்பு வீடுகளை கட்டுவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர் ,திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஏகாம்பரம்,ஒன்றிய குழு உறுப்பினர்கள் சித்ரா, ஜெயப்பிரகாஷ், விஜயபாஸ்கர், ஜனார்த்தனன்,

சுப்பு லட்சுமி ராமசாமி, அபினேஸ்வரி, கன்னியப்பன், அருள், வேலாயுதம், நிர்வாகிகள் புருஷோத்த மன், ரவி, ராஜா. காளி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில் குமார், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கமலக்கண்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வட்டார வளர்ச்சி அலுவலர் சரவண குமார் நன்றி கூறினார்.

### நாகையில் 3வது புத்தக திருவிழா !

# சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்!

## என்.கௌதமன் - உ. மதிவாணன் பங்கேற்பு!

நாகை, ஆக.19-

நாகை மாவட்டம்

நாகை அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்ககம் மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் இணைந்து நடத்தும் மூன்றாவது புத்தக திருவிழா நடைபெற்று வருகிறது. இவ்விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ் தலைமை தாங்கினார். நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.. மதிவாணன், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை. செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வைத்தனர். சட்டத்துறை (சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை, ஊழல் தடுப்புச் சட்டம்) அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்து பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் புத்தகத்திருவிழாவினை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வாசிக்க வேண்டும், வாசிப்பை நேசிக்க வேண்டும் எப்படி ஒவ்வொருவரும் வாசிப்பதினால் முன்னேறி இருக்கிறார்கள் என்பதை எல்லாம் இளைய சமுதாயமும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்கு நேரம் ஒதுக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த புத்தகத்திருவிழாவினை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த மூன்றாவது புத்தக திருவிழாவானது இன்றைய தினம் 16.08.2024 தொடங்கி 26.08.2024 வரை நடைபெறுகிறது. இந்த புத்தக திருவிழாவில்; பல்வேறு பகுதிகளிலிருந்து 50 பதிப்பாளர்கள் கலந்துக்கொண்ட 116 புத்தக அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து வகையான புத்தகங்கள், தமிழ், ஆங்கிலம் உள்ளிட்ட பல்வேறு மொழிகளிலும் உள்ள சுமார் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் இடம் பெற்றுள்ளது. மேலும் பொதுமக்கள் ரூ.10லிருந்து ரூ.1000 வரை வாங்கும் புத்தகங்களுக்கு 10% தள்ளுபடி உண்டு. தினந்தோறும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும், தமிழ் அறிஞர்களி;ன் கருத்தரங்ககளும் கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

தங்கள் பிள்ளைகளுக்கு எப்படி சொத்து மற்றும் பொருள்கள் சேர்த்து வைக்கின்றோமோ, அதே போல தான் நல்ல புத்தகங்களை வாங்கி வைப்பதும் மிக சிறந்த தலைமுறைக்கான சேமிப்பாகும் பிள்ளைகளின் புத்தக வாசிப்பிற்கு நாமே முன் உதாரணமாக நல்ல புத்தகங்களை வாசிப்பதன் மூலம் மிகச் சிறந்த ஆளுமை மிக்க மனிதராக நம்மை மாற்றிக் கொள்ள முடியும் இந்த புத்தக திருவிழா மாணவ மாணவியர் மற்றும் பொதுமக்களிடயே சென்று சேர வேண்டும் என்ற நோக்கத்தில் நடத்தப்படுகிறது. சிறந்த நூல்களின் ஒரு சில பக்கங்கள் கூட பலரது வாழ்வையே மிகச்சிறந்த உயரத்திற்கு எடுத்துச் சென்ற வரலாறுகள் உண்டு. இந்த புத்தகத் திருவிழா இலட்சக்கணக்கான நல்ல புத்தகங்களை ஒரே இடத்தில் பெறுவதற்கான அருமையான வாய்ப்பாகும். தமிழ்நாடு அரசு உருவாக்கி தந்திருக்கின்ற இந்த பெரிய வாய்ப்பை அனைவரும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புத்தகத் திருவிழாவிற்கு வருகை தந்து அரங்குகளை பார்வையிட்டு சென்று விடுவதோடு நிறுத்திக் கொள்ளாமல், புத்தகங்களை வாங்கி செல்ல வேண்டும் புத்தகங்களுக்காக செலவிடுகின்ற தொகை என்பது செலவல்ல, அது மிகச் சிறந்த மூலதனம் என சட்டத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் குப்பைத் தொட்டி என்கிற சிறுகதையோடு, நாகப்பட்டினம் மாவட்டத்தின் 30 சிறுகதை எழுத்தாளர்கள் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பினை சட்டத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு, அதனை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மேலும் இவ்விழாவில் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் ரூ.1 இலட்சமும், தமிழ்நாடு மீனவளர்ச்சி கழகத்தலைவர் அவர்கள் ரூ.10 ஆயிரமும் புத்தகத்திருவிழாவிற்கு நன்கொடை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ரா.பேபி, தலைமை செயற்குழு உறுப்பினர் பா கோவிந்தராஜன், க.ராஜேந்திரன், இல.மேகநாதன் மாவட்ட கழக துணை செயலாளர்கள் சோ. ரவிச்சந்திரன், ஆரூர்.மணிவண்ணன், நாகை நகரக் கழகச் செயலாளரும், நாகை நகர் மன்ற தலைவர் இரா.மாரிமுத்து,நாகூர் நகர கழக செயலாளர் எம் ஆர் செந்தில்குமார், ஒன்றய ஒன்றிய கழகச் செயலாளர்கள் செல்வ. செங்குட்டுவன், கே. பழனியப்பன், என். சதாசிவம், உதயம் வே. முருகையன், என் ஆனந்த், சோ.பா. மலர்வண்ணன், திட்டச்சேரி பேரூர் செயலாளர் முகமதுசுல்தான்,. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெ.ரூபன் சங்கர் ராஜ், நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் ரு.அரங்கநாதன், தென்இந்திய புத்தக விற்பனையாளர் சங்க தலைவர் முருகன் மற்றும் கழக ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு பணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான இந்தியா கூட்டணியின் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றிபெற்ற துரை.வைகோ அவர்களுக்கு வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச்செய்த வாக்காளர் பெருமக்களுக்கு அன்னவாசல் வடக்கு ஒன்றியற்குட்பட்ட ஊராட்சிகளில் நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் கந்தர்வக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் எஸ்.கே.கலியமூர்த்தி, ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, மாவட்ட கவுன்சிலர் அண்ணாப்பட்டி கை.பழனிச்சாமி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் இளவரசன் காந்திநாதன், அம்மாசத்திரம் ரெங்கசாமி, தொடையூர் டி.ஆர். ஆர்.ரெங்கராஜ் உள்ளிட்ட கிளை கழக நிர்வாகிகள், கந்தர்வக்கோட்டை தொகுதி சமுக வலைதள பொறுப்பாளர் எழில் ராஜா, விராலிமலை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தமிழினியன் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.